செ.வெ.எண்:7 நாள்:5.8.2015

# தொழில் முதலீட்டாளர்களுக்கு தங்கள் முதலீடுகளை குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில்களில் முதலீடு செய்து தொழில் வளர்ச்சியில் தங்கள் பங்களிப்பை வழங்கிட வேண்டும் - மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மா.மதிவாணன் இ.ஆ.ப.,அவர்கள் தகவல்

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தமிழ்நாடு தொலைநோக்கு பார்வை 2023 ஆவணத்தின்படி, நமது தமிழ்நாடு மாநிலத்தை தொழில் வளர்ச்சியில் முதன்மை மாநிலமாக மாற்றிட தேவையான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும், அதன் அடிப்படையில் தொழில் வளர்ச்சியை வேகப்படுத்திடவும், **நமது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையில் வருகின்ற செப்டம்பர் மாதம் 9 மற்றும் 10 தேதிகளில் சர்வதேச முதலீட்டாளர்கள் மாநாடு 2015 சென்னையில் நடைபெற உள்ளது.** இம்மாநாட்டின் போது ஒரு லட்சம் கோடி வரையிலான தொழில் சார்ந்த முதலீடுகள் தமிழகத்தில் ஏற்படுத்திட தேவையான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட உள்ளன.

இந்த அருமையான சூழ்நிலையில் தமிழகத்தில் குறு,சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அதற்கேற்றவாறு வளர்ச்சி பெற வேண்டும் என்ற நோக்கத்தில் அத்துறையில் தேவையான முதலீடுகளை ஈர்க்க வேண்டும் என்ற அடிப்படையில் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் ரூ.10,000 முதல் 15,000 கோடி வரையிலான தொழில் முதலீடுகள் ஈர்க்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு தொழில் முதலீடுகளை வரவேற்கும் பணி அனைத்து மாவட்டங்களிலும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

அதன் அடிப்படையில் தொழில் முதலீட்டார்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஏற்படுத்திட திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, இந்த அரிய வாய்ப்பினை ஆர்வமுள்ள தொழில் முனைவோர்கள், படித்த பொறியியல் வல்லுனர்கள், பல்துறையில் ஈடுபட்டு சமுகத்தில் உயர்ந்த நிலையிலுள்ள முதலீட்டாளர்கள் ஆகிய அனைவரும் இப்பொன்னான வாய்ப்பினை பயன்படுத்த தங்கள் முதலீடுகளை குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில்களில் முதலீடு செய்து தொழில் வளர்ச்சியில் தங்கள் பங்களிப்பை வழங்கிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

இதன் மூலம் தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சி பெருகுவதோடு நாட்டின் வேலைவாய்ப்பும் பெருகும். மேலும் இதுபோன்ற முதலீட்டாளர்களுக்கு இந்த நிறுவனங்கள் உற்பத்தி துவங்கும் வரை தேவையான உரிமங்கள் மற்றும் அனுமதி போன்றவற்றை மாவட்டத்தின் பிற துறையிடமிருந்து ஒற்றை சாரளமுறையில் பெற்றுத்தர மாவட்டத் தொழில் மையம் ஆவன செய்யும்.

எனவே திருவாரூர் மாவட்டத்திலுள்ள தொழில் முதலீட்டாளர்கள் பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், திருவாரூர் அவர்களை அணுகுமாறு கேட்டு கொள்ளப்படுகிறார்கள்

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திருவாரூர்**